**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைகள் பீடம்**
**முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி**
**OSC2401– முயற்சியாண்மை**
**இறுதிப் பரீட்சை- 2024/2025**

**காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்**

**திகதி: 25 மே 2025** **நேரம்:பி.ப 1.30- பி.ப 3.30**

*அறிவுறுத்தல்: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக. உங்கள் விடைகள் முறையானதாகவும் தெளிவானதாகவும் இருத்தல் வேண்டும்.*

1. a) முயற்சியாண்மை' எனும் பதத்தினை உங்கள் மொழிநடையில் விளக்குக. (4 புள்ளிகள்)

   b) ஒரு முயற்சியாளராக மாற உங்களை தூண்டிய அடிப்படை காரணிகளை உங்கள் பகுதியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட . ஒரு முயற்சியாளரின் வணிகத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு விளக்குக. (8 புள்ளிகள்)

   c) ஒரு முயற்சியாளராக நீங்கள் தேர்ந்தெடுத்த வணிகத்தைக் குறிப்பிட்டு. வணிகத்தின் தொலைநோக்கு (vision). இலட்சிய நோக்கு (mission) மற்றும் குறிக்கோள்களை (objectives) விளக்குக . (8 புள்ளிகள்)

2. "உலகெங்கிலும் உள்ள நாடுகளின் பொருளாதார உயிர்ச்சக்தியை அதிகரிப்பதிலும், நிலையான வளர்ச்சி. புத்தாக்கத்திற்கும் பின்னடைவை எதிர்ப்பதிலும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) முக்கிய பங்கு வகிக்கின்றன."

   a) ஓர் சிறு வணிகத்தின் பொதுவான பண்புகள் யாவை?
   b) இலங்கையின் தற்போதைய சூழலில் சிறு வணிகத்தின் முக்கியத்துவம் என்ன?
   c) உங்கள் கருத்துப்படி ஒரு "சிறு வணிகமாக" இருப்பதன் நன்மைகள் என்ன?
   d) பாரியளவிலான நிறுவனங்களுக்கு சிறு நிறுவனங்கள் எப்படி உதவுகின்றன?

   (4 x 5 =20 புள்ளிகள்)

3. "எந்தவொரு முயற்சியாளருக்கும் வணிகத்தில் வெற்றிபெற ஒரு வணிகத் திட்டம் தேவை. இருப்பினும். இலங்கையில் உள்ள பல வணிகங்களுக்கு வணிகத் திட்டங்கள் தற்போது வரை இல்லை."

   a) ஒரு முயற்சியாளரின் வெற்றிக்கு ஒரு வணிகத் திட்டம் இருப்பது ஏன் அவசியம்? (4 புள்ளிகள்)

   b) இலங்கையில் பல நிறுவனங்கள் முறையான வணிகத் திட்டம் இல்லாமல் செயல்படுவதற்கான சாத்தியமான காரணங்கள் யாவை? (8 புள்ளிகள்)

   c) வணிகத் திட்டம் இல்லாதது இலங்கையில் உள்ள ஒரு நிறுவனத்தின் நிலைத்தன்மை மற்றும் நீண்டகால வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கக்கூடும்? (8 புள்ளிகள்)

4. "பெண் முயற்சியாளர்களில் பல்வேறு வகைகள் மற்றும் அவர்கள் முயற்சியாளராக மாறுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன". இலங்கையில் பெண் முயற்சியாளரை மேம்படுத்துவதற்காக பல்வேறு அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் பல திட்டங்கள் உள்ளன. இருப்பினும், இலங்கையில் வணிகத்தில் பெண்களின் பங்கேற்பு இன்னும் போதுமானதாக இல்லை."

a) பெண் முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் யாவை? (4 புள்ளிகள்)

b) இலங்கையில் பெண்கள் தொழில் முயற்சியாளராக மாறுவதற்கு உதவும் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் யாவை? எந்தெந்த குழுக்கள் அல்லது அமைப்புகள் இந்த திட்டங்களை செயல்படுத்துகின்றன? (8 புள்ளிகள்)

c) பல்வேறு தொழில் ஆதரவு திட்டங்கள் இருந்தாலும், இலங்கையில் குறைந்தளவு எண்ணிக்கையுடைய பெண்களே வணிகங்களை தொடங்குகிறார்கள். அதற்கான காரணங்கள் யாவை? அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் யாவை? (8 புள்ளிகள்)

5. சிறு குறிப்பு எழுதுக.

a) தொலைநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் குறிக்கோள்கள் (Vision, Mission, Objectives)

b) முயற்சியாளர் சூழல் அமைப்பு (Entrepreneurial ecosystem)

c) SWOT பகுப்பாய்வு

d) சிறு வணிகங்களுக்கு வணிகங்களை பதிவு செய்வதன் முக்கியத்துவம்

a) தனிநபர் முயற்சியாளரின் பண்புகள் (Personal entrepreneurial characteristics (PECs)

(4 x 5 =20 புள்ளிகள்)

**(மொத்தம் 100 புள்ளிகள்)**

*-பதிப்புரிமைக்குரியது-*



56